பக்கங்கள் 21+7

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 29 வெள்ளிக்கிழமை 12.07.2024 அதிர்வு 347

## மொட்டுவின் நிலைப்பாடு 25 ஆம் திகதி அறிவிப்பு!

வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது கட்சியின் நிலைப்பாட்டை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எதிர்வரும் 25 ஆம் திகதி அறிவிக்கவுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து 04



# யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நிரந்தர அரச அதிபர்களை உடன் நியமியுங்கள்

## பிரதமரிடம் சுமந்திரன் எம்.பி. கோரிக்கை



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நிரந்தர அரச அதிபர்களை உடனடியாக நியமியுங்கள் என்று பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார். 04

# யாழில் இன்னமும் 3,571 ஏக்கர் காணிகள் படையினர் வசம்!

## பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார் மாவட்ட பதில் அரச அதிபர்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் படையினர் வசம் தற்போதும் 3 ஆயிரத்து 571 ஏக்கர் காணிகள் இருக்கின்றன என்று பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

பிரதமர் தலைமையில் இன்று நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தனது வரவேற்பு உரையின்போதே மாவட்ட பதில் அரச அதிபர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 624 ஏக்கர் தனியார் காணிகளும், 951 ஏக்கர் அரச காணிகளும் இன்னமும் படையினர் வசம் உள்ளன. 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# கடற்றொழிலாளர்களின் மனநிலை அறியாது முன்னெடுக்கப்படும் சீனாவின் உதவித் திட்டம்!

(எஸ். நிதர்ஷன்)

சீனாவின் உதவி திட்டங்கள் கடற்றொழிலாளர்களின் மனநிலை அறியாது முன்னெடுக்கபடுகின்றன. மக்களுக்கு ஏற்ற திட்டங்களைக் கருத்தறிந்து முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். சுழிபுரம் திருவடிநிலை கெங்காதேவி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் செல்லன் தெய்வேந்திரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருவடிநிலை பகுதியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

சீன தேசத்திலில் இருந்து உதவி திட்டங்கள் வருகின்றன என்று அறியக் கூடியதாக இருக்கின்றது. அதிலும் சீன பொருத்து வீட்டு திட்டம் தொடர்பில் தற்பொழுது வடக்கு, கிழக்கில் பெரிதும் பேசப்படுகிறது.

கடற்கரைகாற்று உவர் நீருக்கு வெகுவாக அழிவடையும் இந்த வீட்டுத் திட்டத்தைப் பெரும்பாலும் எமது பிரதேசத்தவர்கள் தொழிலாளர்கள் முற்று முழுதாக நிராகரித்துள்ளார்கள்.

கரையோரத்துக்கு ஏற்ற திட்டங்களையே நடைமுறைப்படுத்த வேண்டும் என நாங்கள் கோருகின்றோம்.




சீன தேசத்தின் உணவு திட்டம் தொடர்பிலும் தற்பொழுது பேசப்படுகிறது . இலங்கைல் வடக்கு, கிழக்கில் உற்பத்தி செய்யப்படுகின்ற சுதேச அரிசி வகைகளைத் தான் நாங்கள் இவ்வளவு காலமும் உண்டு வருகின்றோம்.

இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற அரிசியைக் கொள்வனவு செய்து வழங்குவதன் மூலம் இருதரப்பு நன்மை கிடைக்கப் பெறும். மீனவர்களும் நன்மை அடைவதோடு விவசாயிகளும் நன்மை அடையலாம்.

எங்களுடைய நாட்டு அரிசிதான் எமது உடலுக்கு ஏற்றதாக இருக்கும். எங்களுடைய நாட்டு அரிசியே வழங்கப்பட வேண்டும்.

சீன அரிசி மற்றும் பல திட்டங்கள் வருகின்றது எனக் கூறப்படுகிறது. ஆனால் இதுவரை எமக்கு கிடைத்தது போல தெரியவில்லை.

எமது கடற்தொழிலாளர்கள் எம்மை கேள்வி கேட்கும் அளவுக்கு இந்த திட்டங்கள் யாருக்கு செல்லுகின்றது என்று நமக்குத் தெரியவில்லை. பதிவுகளைப் பெற்றார்கள் உதவிகள் இன்னும் கிடைக்கவில்லை. எங்கே திட்டங்கள் என்று மக்கள், தொழிலாளர்கள் எம்மிடம் கேள்வி கேட்கின்றார்கள். நாங்களும் எமது சங்க உறுப்பினர்களுக்கு, வருகின்றது என்ற வார்த்தையைத் தெரிவித்துள்ளோம்.

ஆகவே இந்தக் கடற்தொழில் அதிகாரிகள் எவ்வாறு செயற்பட வேண்டுமோ அதனடிப்படையில் செயற்பட்டு எமக்குத் தேவையானதை நிறைவேற்ற வேண்டும். சீன தேசத்தின் உதவிகளை வரவேற்கின்றோம். ஆனால் முறையாக மக்களின் கருத்தறிந்து இந்தத் திட்டங்கள் பெறவேண்டும்.

இதேவேளை, சீனா கடலட்டை பண்ணையை எமது பிரதேசத்தில் முன்னெடுக்க முடியாது. நீரோட்டங்கள், காற்று மற்றும் திடீர் அனர்த்தங்களின் பொழுது இது அடித்துச் செல்லப்பட்டு விடும். நீரோடாத பிரதேசத்தில் இது பொருத்தமானதாக இருக்கும்.

இதற்கான பேச்சுகள் சில முன்னெடுக்கப்படுவதாக அறிகின்றோம். இது தொடர்பில் ஆராய்ந்து எமது பிரதேசத்துக்கு பொருத்தமான விடயங்களை முன்னெடுக்க வேண்டும். மக்களுக்குத் தேவையான திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமே தவிர எதையும் நிவாரணமாக கிடைக்கின்றது என்பதற்காக மக்கள் நலன் அறியாது முன்னெடுக்ககூடாது.- என்றார்.



# வெளிக்கள நிகழ்வில் மாணவர்கள்

(கே. எ. ஹமீட்)

ஒலுவில் அக்ஃஅல் மதீனா வித்தியாலய தரம் 3 மாணவர்கள் தமிழ் பாட வெளிக்கள நிகழ்வாக ஒலுவில் பொது நூலகத்துக்கு சென்றிருந்தனர்.

இதனை அட்டாளைச்சேனை கல்விக்கல்லூரி பயிலுனர் ஆசிரியை எஸ்.எவ். சுஹாதா நெறிப்படுத்தினார். அவருடன் சிரேஷ்ட ஆசிரியை து நூர் சுஹாரா வழிப்படுத்தினார்.



# பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவதே ஜனாதிபதியின் இலக்கு

## ஆளுநர் நஸீர் அஹமட் தெரிவிப்பு



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

இலங்கையில் கடந்த காலங்களில் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகரமாக சமாளித்தது போன்றே எதிர்காலத்தில் அவ்வாறான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடாத வகையில் சுபீட்சமான நாடு ஒன்றைக் கட்டியெழுப்புவதே ஜனாதிபதியின் இலக்காகும் என்று வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமேல் மாகாணத்தின் 33 உள்ளூராட்சி மன்றங்களில் ஒப்பந்த, தற்காலிக, பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றிய சுமார் 800 இற்கும் மேற்பட்டோருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (08) நாத்தாண்டிய நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் உரையாற்றிய வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்,

21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப எமது உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் மாற்றமடைய வேண்டும். ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் வரி அறவிடல், பாதைகள் பராமரித்தல் உள்ளிட்ட வழக்கமான செயற்பாடுகளுக்கு அப்பால் அந்தந்தப் பிரதேசங்களில் இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி உச்ச பட்ச பலனைப் பெறவும், அதனைக் கொண்டு வருமானம் ஈட்டிக் கொள்வதற்குமான வழிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஸ்மார்ட் டெக்னோலொஜி எனும் நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக செயற்பாடுகளை இலகுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டை நவீன சவால்களைச் சமாளிக்கும் வகையில் மாற்றியமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

அதன் ஒரு கட்டமாக இனியொரு பொருளாதார நெருக்கடி ஏற்படாத வகையில் நாட்டை சுபீட்சமாக மாற்றி, நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். அதனை அடியொற்றி வடமேல் மாகாணத்தை தொழில் நுட்பம், சுகாதாரம், கல்வி, சுற்றுலாத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் மேம்பட்ட மாகாணமாக மாற்றி அமைப்பது எங்கள் இலக்காகும்.

அதனை மனதில் கொண்டு அனைத்து அரச ஊழியர்களும் தங்கள் கடமைகளை வினைத் திறனுடன் மேற்கொள்ள வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன , உள்நாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, நகர அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர்களான அமல் சிந்தக மாயாதுன்னே, சமன்பிரியஹேரத், யதாமினி குணவர்த்தன, அலி சப்ரி ரஹீம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகம் வாழ்வாதார உதவியாக ஆடு வழங்கியது



(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகம், தென்மராட்சி மட்டுவில் பகுதியில் வாழ்வாதார உதவி தேவைப்பாடு உடைய குடும்பம் ஒன்றுக்கு நல்லின ஆடு ஒன்றை வழங்கியுள்ளது.

சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகத்தின் புதிய தலைவராக கிருபாகரன் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் முதலாவது செயற்றிட்டமாக இந்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆளை அடித்துப் படுகொலை செய்துவிட்டு யானை தாக்கி உயிரிழந்தார் என்று நாடகம்

## நான்கு இளைஞர்கள் கைது

(ஆ.ரமேஸ்)

பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரலமுல்ல பகுதியில் நபர் ஒருவரைத் தாக்கிக் கொலை செய்துவிட்டு யானை தாக்கியது எனக் கூறி நாடகமாடிய 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மஹியங்கனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மஹியங்கனை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கிரலமுல்ல பகுதியில் கடந்த 7 ஆம் திகதி யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மஹியங்கனை பொலிஸாருக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் உயிரிழந்தவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகவில்லை என்று தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் தனிப்பட்ட தகராறு காரணமாக சில நபர்களால் தாக்கப்பட்ட பின்னர் இரத்தக்காயங்களுடன் யானை தாக்கியது போன்று தேவாலயம் ஒன்றுக்கு அருகில் கொண்டுவரப்பட்டு போடப்பட்டார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்துப் படுகாயமடைந்தவரை அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முயன்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மஹியங்கனை மற்றும் கிராதுருகோட்டை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18, 24, 28 மற்றும் 35 வயதுடைய இளைஞர்கள் நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# வாகன விபத்தில் இருவர் படுகாயம்!





(ஆ.ரமேஸ்)

நுவரெலியா மாநகர சபைக்குச் சொந்தமான கழி பவுஸர் வாகனம், மோட்டார் கார் மற்றும் ஓட்டோ ஆகியவற்றுடன் மோதி பின் பாதையைக் கடந்த இருவர் மீது மோதுண்டு இடம்பெற்ற விபத்தில் பாதையில் சென்ற இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நுவரெலியா பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள உடப்புஸ்ஸலாவை நோக்கி செல்லும் பிரதான வீதியில் இன்று காலை 10.30 மணியளவில் இடம் பெற்றது.

கண்டி வீதியை நோக்கிப் பயணித்த நுவரெலியா மாநகர சபைக்குச் சொந்தமான கழி அகற்றும் பவுஸர், ஆவா எளிய பகுதியை நோக்கிப் பயணித்த மோட்டார் கார், ஓட்டோ ஆகியவற்றுடன் மோதிய பின் பாதையில் சென்ற இருவர் மீது மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் வீதியில் பயணித்த இருவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இருவருக்கும் கால், கைகளில் முறிவுகள் ஏற்பட்டுள்ளன என்று நுவரெலியா மாவட்ட வைத்தியசாலை அதிகாரி தெரிவித்தார்.

கழி அகற்றும் பவுஸரைச் செலுத்தி வந்த சாரதியை நுவரெலியா பொலிஸார் கைது செய்தனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மொட்டுவின்...**

அறியமுடிகின்றது.

கட்சித் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவால் அன்றைய தினம் விசேட உரை நிகழ்த்தப்படவுள்ளது எனவும், இதற்காக பிரமாண்ட நிகழ்வொன்று நடத்தப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவரை நியமிப்பதா அல்லது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதா என்பது தொடர்பில் மொட்டுக் கட்சி ஆராய்ந்து வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டிலேயே அந்தக் கட்சி நகர்கின்றது எனத் தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து குறைந்தபட்சம் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களையாவது வளைத்துப் போடுமாறு ரணிலிடம் மொட்டுக் கட்சி இடித்துரைத்துள்ளது. அதனால்தான் வேட்பாளரை அறிவிப்பதற்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை மொட்டுக் கட்சி கால அவகாசம் எடுத்துள்ளது.

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி...**

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் இன்று முற்பகல் நடைபெற்ற மாவட்ட விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே சுமந்திரன் எம்.பி. இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

"யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் தற்போது நிரந்தர அரச அதிபர்கள் இல்லை. விரைவில் தேர்தல்கள் இடத்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் உடன் நிரந்தர அரச அதிபர்களை நியமிக்க வேண்டும்." - என்று பிரதமரும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அமைச்சருமான தினேஷ் குணவர்தனவிடம் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

**யாழில் இன்னமும்...**

இதிலே தனியார் காணிகளில் இராணுவத்தினரிடம் ஆயிரத்து 775 ஏக்கரும், விமானப்படையினரிடம் 660 ஏக்கரும்,, கடற்படையினரிடம் 160.67 ஏக்கரும், பொலிஸாரிடம் 28 ஏக்கரும் உள்ளன.

இதேபோன்று அரச காணிகளில் இராணுவத்தினரிடம் 416.66 ஏக்கரும், விமானப் படையினரிடம் 349.82 ஏக்கரும், கடற்படையினரிடம் 179.70 ஏக்கரும், பொலிஸாரிடம் 10.34 ஏக்கரும் உள்ளன.

இதற்கமையவே யாழ். மாவட்டத்தில் தற்போதும் 3 ஆயிரத்து 571 ஏக்கர் காணிகள் படையினர் வசம் உள்ளன என்று பிரதமர் தினேஷ் குணவர்தனவின் கவனத்துக்கு மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன் கொண்டு வந்தார்.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN WOLF.CA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வேலைநிறுத்த மாபியா!

'பயங்கரவாதம்' என்ற சொல் தொடர்பில் நமது மக்களுக்கு - தமிழ் மக்களுக்கு - நல்ல பரிச்சயம் உண்டு.

தமது வரலாற்றுத் தாயகத்தில், தமது இனத்தின் இருப்பை உறுதிப்படுத்துவதற்காகவும், தங்களின் தனித்துவ தாயகம், மொழி, இனப் பாதுகாப்பு ஆகியவற்றை நிலை நிறுத்துவதற்காகவும் இந்த இலங்கை தீவில் தமிழர்கள் நடத்திய போராட்டத்தை பயங்கரவாதமாக சித்திரித்த பௌத்த - சிங்களப் பேரினவாதம், அந்த விடுதலைப் போராட்டத்தை நிர்மூலமாக, ஒரு தேசிய இனத்தின் மீது அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டமையை கடந்த நாற்பது, ஐம்பது வருட கால நிகழ்வாக நாங்கள் கண்டோம்.

ஈழத் தமிழினத்தை ஒடுக்கும் அரசு பயங்கரவாதம் இலங்கையின் பௌத்த - சிங்கள அரசின் கொள்கைப் போக்காக, அதன் ஒவ்வொரு கட்டமைப்பு ஊடாகவும் இங்கு கட்டவிழ்வதை இப்போது தினசரி நிகழ்வாகவும் நாம் கண்டு வருகின்றோம்.

பயங்கரவாதம் என்று சொல்லாடலுக்கு பல விளக்கங்கள் வியாக்கியானங்கள் இருக்கின்றன.

பொதுவாக "பயங்கரவாதம் என்பது யாருக்காகவோ அப்பாவிகள் பாதிக்கப்படுவர் எனத் தெரிந்தே, முறையான அல்லது முறையற்ற அமைப்பாக இணைந்தோ, தனித்தோ, மேற்கொள்ளும் கொடும் செயல் அல்லது நடவடிக்கை."- என்று விவரிக்கப்படுகின்றது.

"பயங்கரவாதத் தாக்கம் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கலாம். ஆயுதங்களைக் கொண்டு மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் பாதிப்புகள் வெளிப்படையானவை. அதோடு அவை அப்பாவிகளின் உயிருக்கோ அல்லது உடைமைக்கோ, உயிருடைமைக்கோ பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கோடு செயல்படுத்தப்படுபவை. எனவே, பயங்கரவாதத் தாக்கம் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கலாம். வெளிப்படையாகத் தெரியும் வகையில் அமைந்த நடவடிக்கைகளை 'வன் பயங்கரவாதம்' (Hard-Terrorism) என அழைக்கலாம். இவை பெரும்பாலும் ஆயுத குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்றன. அதே வேளையில், பயங்கரவாதத் தாக்கம் வெளியே தெரியாத வண்ணம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை 'மென் பயங்கரவாதம்' (Soft-Terrorism) என அழைக்கலாம். இவை அதிக அளவில் பதவி மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன." - என்று பயங்கரவாதத்தை ஒட்டிய விவரணங்கள் விளக்குகின்றன.

அப்படிப் பார்த்தால் பயங்கரவாதம் என்பது ஆயுதங்களால், நேரடியான தாக்குதல்கள் மூலம் செய்யப்படுபவை மட்டுமல்ல, அவற்றையும் தாண்டியும் உள்ளது.

தொழிற்சங்க உரிமைகள் என்ற பெயரில் ஒன்று கூடும் சுதந்திரத்தைப் பயன்படுத்தித் திடீர் திடீரென முன்னெடுக்கப்படும் பொறுப்பற்ற - திட்டமிட்ட - வேலை நிறுத்தங்கள் கூட ஒரு வகையில் மக்கள் குழுமம் மீதான பயங்கரவாத நடவடிக்கைகளாகவே சித்திரிக்கப்பட வேண்டியவை.

அதிலும் ரயில்வே தொழிற்சங்கத்தினர், பொறுப்பற்று - கோமாளித்தனம் போல - அதிரடியாக அவ்வப்போது முன்னெடுக்கும் வேலை நிறுத்தங்கள் பொதுமக்களுக்கு வேண்டுமென்றே நெருக்கடிகளை ஏற்படுத்துபவை.

ஒவ்வொரு தடவையும் இத்தகைய அசௌகரியங்களை ஏற்படுத்துபவர்களுக்கு அதற்கான பொறுப்பு சுமத்தப்படுவதில்லை.

இப்படித் திடீர் வேலை நிறுத்தங்களை நடத்தி அவர்கள் தங்கள் தொழிற்சங்க கோரிக்கைகளை நிறைவேற்றுகின்றார்களோ இல்லையோ, ஒவ்வொரு தடவையும் பெரும் தேசிய இழப்பையும் மனித வலு விரயத்தையும், மக்களுக்கு அசௌகரியங்களையும் ஏற்படுத்தி விட்டு சாகவாசமாக தம் வேலைகளை கவனிக்கச் சென்று விடுகிறார்கள்.

ஒரு நாளைக்கு காட்மார். இன்னொரு நாளைக்கு ரயில்வே சாரதிகள். பிறிதொரு நாளைக்கு ரயில் நிலைய அதிபர்கள் என்று இப்பிரிவினர் மாறி, மாறி வேலை நிறுத்தப் பயங்கரவாதம் மூலம் முன்னெடுக்கும் நாசகார அட்டூழியம் தண்டிக்கப்படாத ஒரு குற்றமாகத் தொடர்கிறது.

தொழிலாளர் உரிமை, தொழிற்சங்க உரிமை, அவர்களின் நீதி - நியாயமான போராட்டங்கள் என்பன வேறு. அவை முறை தலையாக முன்னெடுக்கப்பட வேண்டும். மாஃபியா கும்பல் அணுகுமுறை போல அல்ல.

ரயில்வேத் துறை என்றல்ல, கல்வித் துறை, உயர்கல்வித்துறை போன்றவற்றிலும் இத்தகைய வேலை நிறுத்த முஸ்தீபுகளில் ஈடுபடுவோர், ஈடுபட்டோர் தங்களின் நடவடிக்கைகளில் உள்ள நீதிக்கும், அவை பயங்கரவாதமாகச் சித்திரிக்கப்படுவதற்குள்ள அடிப்படைக்கும் இடையில் மெல்லிய இடைவெளியை புரிந்து கொண்டு, சமூகப் பொறுப்புடன் காரிய மாற்ற வேண்டும்.

பொருளாதாரத்தில் நொடித்து போய் இருக்கும் நாட்டில் பிரச்சினைகள் போராட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்கத்தினருக்கு மட்டுமே உள்ளன என்பதல்ல, அதையும் தாண்டி ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ளது என்பதை அவர்கள் பொறுப்போடு கவனத்தில் கொள்ள வேண்டும்.



# நானாட்டான் தூய ஆரோக்கிய அன்னை ஆலய திருவிழா

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நானாட்டான் தூய. ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி நேற்று முன்தினம் (10) புதன்கிழமை அருட்தந்தை ரெஜினோல்ட் அடிகளார் தலைமையில் கூட்டு திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருநாள் திருப்பலியில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் உள்ளடங்களாக ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

நானாட்டான் பங்குத்தந்தை அருட்தந்தை பெனோ அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் ஏழு நாள் ஆயத்த வழிபாடுகளுடன் திருநாள் திருப்பலி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.









# சிசில்டன் தமிழ் வித்தியாலத்தில் இரண்டு மாடி கட்டட திறப்புவிழா!

## கல்வி இராஜாங்க அமைச்சர் திறந்து வைப்பு





**(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)**

பலாங்கொட கல்வி வலையத்துக்கு உட்பட்ட பின்னவலை, சிசில்டன் தமிழ் வித்தியாலத்தின் இரண்டு மாடிகளைக் கொண்ட புதிய கட்டடம் திறந்து வைக்கப்படட்டுள்ளது.



21.47 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்து மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

வித்தியாலயத்தின் அதிபர் ஞான பிரகாசம் தேவகுமார் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாலிய எல்லாவள அழைப்பின் பேரில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஷ ாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டு பாடசாலையின் புதிய பாடசாலை கட்டடத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் மற்றும் சப்ரகமுவ ஆளுனர் உட்பட வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டா கல்வி பணிப்பாளர், இம்புல்பிட்டி பிரதேச செயலாளர், அயல் பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.







# வாழைச்சேனை கைலாயப்பிள்ளையார் ஆலய தேர்!

(ந.குகதர்சன்)

கிழக்கிலங்கையில் பழமை வாய்ந்த ஆலயமான வாழைச்சேனை கைலாயப்பிள்ளையார் தேவஸ்தான ஆனி உத்தர திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றது.

ஆலயத்தில் இருந்து ஆரம்பமான தேரோட்டம் வாழைச்சேனை பேச்சியம்மன் ஆலய வீதி, சேர்மன் கனகரெத்தினம் வீதி, பிரதான வீதி, விபுலானந்தர் வீதி மற்றும் கல்குடா வீதி வழியாக ஆலயத்தை சென்றடைந்தது.



பூசைகள் யாவும் மஹோற்சவ கால பிரதம குரு ஆகமபிரிவினா, பிரதிஸ்டா சாகரம் வாமதேவ சிவாச்சாரியார், ஆர்ச்சார்ய பூசணம் சிவஸ்ரீ சபா பாஸ்கரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

வாழைச்சேனை கைலாயப்பிள்ளையார் ஆலயம் வரலாற்றைக் கொண்ட ஆலமாகும். இங்குள்ள மூல விக்கிரகம் கைலாய மலையில் இருந்து கொண்டு வரப்பட்ட கற்களால் உருவாக்கப்பட்டதாகும்.

# 48 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் வெள்ளிப் பதக்கம் வென்ற நிந்தவூர் மதீனா!

## வீரர்கள் கௌரவிப்பும் சான்றிதழ் வழங்கலும்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை இணைந்து நடத்தும் தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கபடி போட்டிகளில் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாகவும் கிழக்கு மாகாணம் சார்பாக பங்கு பற்றிய நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகம் பதக்கம் பெற்றுள்ளது.

இந்தச் சாதனையைக் கௌரவித்து வீரர்களுக்குச் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கி வைக்கும் நிகழ்வு நிந்தவூர் பிரதேச செயலகத்தின் செயலாளரும் சட்டத்தரணியுமான ஏ.எம்.அப்துல் லத்தீப் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதேச செயலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு வீரர்களை வாழ்த்தி உற்சாகப்படுத்தினர்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற போட்டிகளில் சப்ரகமுவ மற்றும் தென் மாகாண அணிகளை வீழ்த்தி இறுதிப் போட்டியில் வட மத்திய மாகாண அணிக்கு எதிராக 2 புள்ளிகள் வித்தியாசத்தில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றதன் மூலம் நிந்தவூர் பிரதேசத்துக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர் பாதுகாப்பு, பராமரிப்பு தொடர்பான கலந்துரையாடல்







**(றியாஸ் ஆதம்)**

சிறுவர்களுடைய பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பில் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகிலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்தியத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் வன்முறைகளில் இருந்து அவர்களை பாதுகாத்து பராமரிப்பது தொடர்பாக துறைசார்ந்தவர்களுடனான உயர்மட்ட கலந்துரையாடல் புதன்கிழமை (10) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே பிராந்திய பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்முறைகளில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதும் வன்முறைக்குள்ளான சிறுவர்களை பராமரித்து அவர்களுக்கான சேவைகளை திறன்பட வழங்குவதற்கும் துறைசார்ந்த அதிகாரிகள் முன்வர வேண்டும். அது அவர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

அந்த வகையில் சகல நிறுவனங்களும் ஒன்றுபட்டு செயல்படுகின்ற போது சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைக்குறைக்கமுடியும். அத்துடன்பாதிக்கப்படும் சிறுவர்களையும் பராமரித்து அவர்களுக்குச் சிறந்த ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும்.- என்றார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ்.ஷாபி, உளநலப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.நௌபல், தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின் உள்ளிட்ட சுகாதார மற்றும் கல்வித் திணைக்களங்களின் அதிகாரிகள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள், உளவளத் துணை உத்தியோகத்தர்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய உளநலப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.நௌபல் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தார். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பங்குதாரர்கள் ஆக்க பூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்டனர்.

கல்முனை பிராந்தியத்தில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைத்து சிறுவர்களை பாதுகாத்தல், வன்முறைகளுக்கு உள்ளான சிறுவர்களை பராமரித்து அவர்களுக்கான சேவையினை திறன்பட வழங்குதல், சிறுவர்களின் நலன் கருதி துறை சார்ந்தவர்களை ஒன்றிணைத்து அமைக்கப்பட்ட குழுவை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டி, சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுதல், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் அவர்களை பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் என பல்வேறு தீர்மானங்கள் இதன் போது நிறைவேற்றப்பட்டன.



# வவுனியா மாவட்டத்தில் கராத்தே ஐந்தாவது தரப்படுத்தல் பரீட்சை!









(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஐ.எம்.ஏ. இலங்கை கிளையின் வவுனியா மாவட்ட பயிற்சி நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் ஐந்தாவது தரப்படுத்தல் பரீட்சை வவுனியா மாவட்ட ஐ.எம்.ஏ. தலைவர் பி. மிதுசன் ஏற்பாட்டிலும், ஐ.எம்.ஏ. வவுனியா மாவட்ட செயலாளர் பீ. ஆகாசின் நெறிப்படுத்தலிலும் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் (9) நடைபெற்றது.

தென்கிழக்கு பல்கலைக் கழக உடற்கல்வித்துறை பொறுப்பாளர் முஹம்மது இக்பால் பங்குபற்றுதலோடு இடம்பெற்ற கராத்தே பயிற்சி மற்றும் தரப்படுத்தல் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தின் பல பிரதேசங்களிலுமிருந்து போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

# சேவையைப் பாராட்டிக் கௌரவிப்பு!





(எம்.ஏ.றமீஸ்)

34 வருட காலமாக கல்விச் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) உதவி அதிபர் ஏ.எம்.நபீலின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (10) கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதி அதிபர்களான என்.எம்.எம்.சாலிஹ், ஏ.எல். நசீபா, உதவி அதிபர்களான எம்.ஐ.எல். ஜாபீர், எம்.சம்ஸ் றபா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த 34 வருட காலமாக ஆசிரியர் சேவையில் தன்னை அர்ப்பணித்து கல்விச் சேவை புரிந்து வந்த ஏ.எம்.நபீலின் சேவையைப் பாராட்டி அவர் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

# மலேசிய பிரதமரைச் சந்தித்தார் கிழக்கு மாகாண ஆளுநர்!





(எஸ்.கீதபொன்கலன்)

மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் கடந்த செவ்வாய்க்கிழமை கோலாலம்பூரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ சரவணமுருகனின் விசேட அழைப்பின் பேரில் உத்தியோகப்பூர்வ பயணமாக ஆளுநர் செந்தில் தொண்டமான் ஞாயிற்றுக்கிழமை மலேசியாவுக்குச் சென்றார்.

பிரதமர் அன்வர் இப்ராஹிம் உடனான சந்திப்பில் மலேசியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து ஆழமான கலந்துரையாடலை ஆளுநர் செந்தில் தொண்டமான் நடத்தினார்.

அத்துடன், இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான அழைப்பையும் பிரதமர் இப்ராஹிம்க்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் விடுத்துள்ளார்.

இலங்கையில் வாழும் பெருந்தோட்ட சமூகத்தின் 200 வருட நினைவு முத்திரையையும் இதன்போது மலேசியப் பிரதமருக்கு வழங்கியிருந்தார்.

இதேவேளை, மலேசிய நிதியமைச்சர் அமீர் ஹம்சா, இஸ்லாமிய சமய விவகாரங்கள் அமைச்சர் நைம் ஆகியோரையும் மரியாதை நிமித்தமாக ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்தார்.



# இலங்கை மாணவர்களுக்கான விசாவை 4 வருடங்களுக்கு அதிகரிக்கக் கோரிக்கை

## மலேசியா உயர் கல்வி அமைச்சரிடம் விடுத்த கிழக்கு மாகாண ஆளுநர்

(நூருல் ஹுதா உமர்)

மலேசியாவில் பட்டப்படிப்பை தொடரும் இலங்கை மாணவர்களுக்கான விசாவை 4 வருடங்களுக்கு அதிகரிக்குமாறு மலேசியா உயர் கல்வி அமைச்சரிடம் கிழக்கு மாகாண ஆளுநர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலேசியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மலேசியா உயர் கல்வி அமைச்சர் ஷாம்ப்ரி அப்துல் காதிரை சநதித்து இலங்கைக்கும் மலேசியாவுக்குமான கூட்டுத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடினார்.

மலேசியாவில் உயர்கல்வி கற்கும் 3 ஆயிரத்து 800 இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் தற்போதைய சட்டத்தின் படி ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் இலங்கைக்கு திரும்பி விசாவைப் புதுப்பிக்கும் நிலை காணப்படுகிறது.

ஆதலால் அவர்களின் பட்டப்படிப்பை நிறைவு செய்யும் காலமான 4 வருடங்களுக்கு விசா காலத்தை அதிகரித்து தருமாறு மலேசியா உயர் கல்வி அமைச்சர் ஷாம்ப்ரி அப்துல் காதிரிடம் ஆளுநர் வேண்டுகோள் விடுத்தார்.

ஆளுநரின் வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சர் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து மலேசியாவுக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு மலாய் மொழிக்கான பயிற்சியை இலங்கையில் ஆரம்பிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. மலேசியாவுக்கும் இலங்கைக்குமான கல்வி தொடர்பான கூட்டு பரிமாற்றத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ சரவணன் முருகன் மற்றும் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் சுமங்கல டயஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# பிங்கிரி கற்தூண் விகாரையின் அபிவிருத்திகள்; வடமேல் மாகாண ஆளுநர் நேரில் கண்காணிப்பு!

( கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

பிங்கிரிய கற்தூண் விகாரையின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்கான கண்காணிப்புச் விஜயமொன்றை வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் செவ்வாய்க் கிழமை (09) மேற்கொண்டிருந்தார்.

அசோகப் பேரரசின் போது இந்திய வணிகர்களால் இந்த விகாரை நிறுவப்பட்டது என்று புராண வரலாறுகள் மூலம் தெரிய வருகின்றது.

2300 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட இந்த கோயில் இரண்டாம் பேதீஸ் மன்னரின் ஆட்சியின் போது மேம்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் எஞ்சியுள்ள 206 களிமண் கோயில்களில் களிமண் சுவர்களைக் கொண்ட மிகப் பெரிய கோயில் இதுவாகும்.

தற்போது, ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு விகாரைக்கு சொந்தமான நிலமானது, மன்னர் கால ஆட்சிகளின்போது தானமாக அளிக்கப்பட்டு, ஆங்கிலேயர் ஆட்சியின்போது 1864 ஆம் ஆண்டு இந்த நிலங்களின் உரிமை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அங்கீகரிக்கப்பட்டது.

தற்போது இந்த விகாரையின் பாதுகாப்பு, தொல்லியல் அகழ்வாராய்ச்சி பணிகள் நடைபெற்று வருகின்றன. எதிர்காலத்தில் உள்ளூர் சுற்றுலா நடவடிக்கைகள், அருங்காட்சியகம் அமைக்கும் வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வது தொடர்பில் வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் நேரில் பார்வையிட்டார்.

விகாரையின் வரலாறு மற்றும் அங்கு புதையுண்டு கிடக்கும் புராதன மதிப்புகள் தொடர்பான விடயங்கள் குறித்தும் விகாராதிபதி ராஜகீய பண்டித படிவெல சோரத தேரரிடம் கேட்டறிந்து கொண்டார்.

ஆலயத்தின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு, அது தொடர்பான செயற்பாடுகளுக்கு தனது பூரண ஆதரவை வழங்குவார் என்று ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் இந்திய பௌத்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# மன்னார் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் தீர்மானங்கள் நடைமுறைக்கு வருவதில்லை

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் குற்றச்சாட்டு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எவையும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் என்.எம்.எம்.பாரிஸ் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார்.

மன்னாரில் இன்று புதன்கிழமை (10) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு,

மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் என்ற போர்வையிலே அபிவிருத்தி குழுவின் தலைவர் தனது அரசியலை முன்னெடுத்து செல்கிறார். தன்னை பிரபலப்படுத்திக் கொள்வதற்காகவும்



இந்தக் கூட்டத்தை நடத்துகிறார்.

மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்தி குழு கூட்டம் என்கிற போர்வையில் அபிவிருத்திக் குழு கூட்டம் இடம்பெற்று வருகின்றது.வழமையாக இடம் பெற்று வரும் அபிவிருத்தி குழு கூட்டத்தில் எடுக்கப்படுகின்ற, எடுக்கப்படும் தீர்மானங்கள் எதுவும் நடை முறைப்படுத்தப் படுவதில்லை.

அரச திணைக்கள அதிகாரிகளை அழைத்துச் செலவீனங்களை வழங்குகின்றார்களோ தவிர இங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் சேவைகள் எவையும் மக்களைச் சென்றடைவது இல்லை.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான மணல் மற்றும் கிரவல் போன்றவற்றை தனது ஆதரவாளர்களுக்கு அனுமதியை வழங்கியுள்ளார். குறித்த விடயத்தை வன்மையாக கண்டிக்கின்றோம்.

மேலும் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகளுக்கு அனைத்து திணைக் களங்களுக்கும் தனது சிபாரிசு கிடைத்தால் மட்டுமே மணல் மற்றும் கிரவல் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி வழங்க வேண்டும்.– என்றார்.






# ‘நிதர்சனதத்தின் நிழல்’ கவிதை நூல் வெளியீடு!

(றிஸ்வான் சாலிஹூ)

அக்கரைப்பற்று முபீதா அமீன் எழுதிய கன்னிப்படைப்பான “நிதர்சனத்தின் நிழல்” கவிதை நூல் வெளியீட்டுவிழா சனிக்கிழமை (06) அக்கரைப்பற்று கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூசணம் மீரா எஸ். இஸ்ஸடீன் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சமூகத்தில் எழுத்துத்துறையில் இலை மறைகாய்களாய் ஒளிந்திருப்பவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களது எழுத்தாக்கத்துக்கு உயிரூட்டும் வகையில் செயற்பட்டுவரும் ஏட்டுலா கனவாக்கம் அமைப்பால் இது வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக் கலந்து கொண்டார்.



விசேட அதிதிகளாக அக்கரைப்பற்று பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி என். நவப்பிரியா, தென் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.ஏ.றசாக், றஸ்பாஸ் நிறுவன பணிப்பாளர் ஏ.கே. றிப்னாஸ் மற்றும் கலை இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், நூலாசிரியரின் குடும்பத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நூலின் முதற்பிரதியை றஸ்பாஸ் நிறுவன பணிப்பாளர் ஏ.கே.றிப்னாஸ்க்கு நூலாசிரியர் வழங்கினார்.

பிறை எப்.எம். அறிவிப்பாளர் றம்ஸானா ஸமீலுக்கான நூலின் பிரதியை இந்தநிகழ்வின் பிரதம அதிதி வழங்கினார்.



# அக்கரைப்பற்று ஸாஹிறா வித்தியாலயத்துக்கு ஆய்வு கூட உபகரணங்கள் வழங்கிவைப்பு!

(றிஸ்வான் சாலிஹூ)

அக்கரைப்பற்று ஸாஹிறா வித்தியாலயத்துக்குக் கிழக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை பிரதி ஆணையாளர் டாக்டர் எம்.ஏ.நபீல் ஆய்வு கூட உபகரணங்களை வழங்கியுள்ளார்.

இந்தப் பாடசாலை மாணவர் தேவை கருதி விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கான நுணுக்குக் காட்டியும், விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் விசேட கல்விப் பிரிவு மாணவர்களுக்கு, அவர்களின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு நிறைப்போசணை பிஸ்கட்டும் இதன்போது வழங்கப்பட்டன.



பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ்டம் இவை வழங்கி வைக்கப் பட்டன.

அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், வைத்திய அதிகாரிகள், சுகாதார துறையினர், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.






# உகந்தை ஆலய சூழலில் போதிய வசதியில்லை; பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியில் பக்தர்கள்!

## கிணறுகளில் வாளி இல்லை! ஆலயச் சூழலில் குப்பைகள் குவிப்பு!!

( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலய ஆடி வேல் விழா உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் தினமும் கதிர்காமம் பாதயாத்திரைக்கும் திருவிழாவுக்குமாகச் செல்லும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் உகந்தைமலைக்கும் சென்று வருகின்றனர்.

இந்த நிலையில், அங்குள்ள ஏழு கிணறுகளிலும் வாளிகள் இல்லாமையால் யாத்திரிகர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குடிநீரைப் பெறுவதற்கும் நீராடுவதற்கும் பலத்த சிரமங்களை அவர்கள் எதிர்நோக்குகின்றனர்.

அதைவிட அங்கு தினமும் பெறப்படும் குப்பை கூழங்கள் ஆலய வளாகத்தின் தென் புறத்திலே கொட்டப்பட்டு வருகின்றன.

அதனால் அங்கு சூழல் மாசடைந்து பாதிப்படையவும் தொற்றுநோய்க்கான காரணிகள் தோன்றவும் வாய்ப்பு ஏற்படுகின்றன. இதனை நிவர்த்தி செய்ய ஆலய நிர்வாகம் மற்றும் சுகாதார துறையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அங்கு செல்லும் அடியார்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருவிழாக்கள் நிறைவடைய இன்னும் 10 நாள்கள் உள்ளன. எதிர்வரும் 22 ஆம் திகதி தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது.

எனவே இந்த ஆலயங்களிலுள்ள கிணறுகளுக்கு வாளிகளைப் பொருத்தி அடியார்களுக்கு போதுமான வசதியை ஏற்படுத்த வேண்டும். அதேபோன்று இந்த குப்பை கூழங்கள் பக்தர்கள் கூடுகின்ற ஆலய வளாகத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்றும் பக்தர்கள் கோரிக்கை விடுத்துவருகின்றார்கள்.

இந்த ஆலய உற்சவத்திற்கான முன்னோடிக் கூட்டம் அம்பாறை அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம முன்னிலையில் நடைபெற்று பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் இவ்வாறான குறைபாடுகள் நிலவுவது அடியார்களின் நலன்புரி செயற்பாடுகளை வழங்குவதை கேள்விக் குறியாக்கியுள்ளது.

எனவே இந்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று பக்தர்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை ஜனநாயக நாடு என்பதை நிரூபிக்க அவ்வப்போது தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்!

## இலங்கை ஜனநாயக முன்னணியின் தலைவர் கமால்தீன் தெரிவிப்பு

(எம்.எப்.றிபாஸ்)

இலங்கை ஜனநாயக நாடு என்பதை நிரூபிப்பதற்காக அவ்வப்போது தேர்தல்கள் நடத்தப்படுவதுடன், நீதித்துறை, நிர்வாகத்துறை என்பன அதன் சுய ஆதிக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட வேண்டும்.

இலங்கை ஜனநாயக முன்னணியின் தலைவர் ஏ.பீ. கமால்தீன் இவ்வாறு கேட்டுள்ளார்

ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் குறித்த காலப் பகுதியில் நடத்தப்பட்டு ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும்.

அவ்வாறில்லாமல் நீதித்துறையின் மீதும் நிருர்வாகத் துறையின் மீதும் அரசு செல்வாக்கு செலுத்தி, தேர்தல்களை திட்டமிட்டு பிற்போட்டு ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்க முடியாது.

சம்பள உயர்வு கோரியும் வாழ்க்கை செலவு உயர்வுக்கு தீர்வு வேண்டியும் தொழிற்சங்கங்கள் மேற்கொண்டுவரும் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே ஜனநாயக முன்னணியின் தலைவர் ஏ.பீ. கமால்தீன் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது தொடர்பாக



கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச ஊழியர்களுக்கு 2025 ஆம் ஆண்டில் இருந்து சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று அறிவித்துள்ள நிலையில், இவ்வாறான சம்பள அதிகரிப்பு உடனடியாக வழங்கப்பட வேண்டும் என அரசாங்க ஊழியர்களும், தொழிற்சங்கங்களும் வேண்டி நிற்கின்றன.

இதனால் 2025 ஆம் ஆண்டுக்கான அரசின் வரவு, செலவு திட்டத்துக்குக் காத்திருக்காமல் இப்போதே ஆக்க பூர்வமான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற போது அரச ஊழியர்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

இதன் அடிப்படையில் அதிகரிப்பு செய்யப்பட்டுள்ள மின்சார கட்டணம், நீர் கட்டணம், எரிபொருள்களின் விலைகள் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலைகளை குறைக்கும் போது அரச ஊழியர்களது மாதாந்த வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட்டு, அவர்களுடைய சுமை குறைவடையும் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு விலை குறைப்பு செய்யும் போது அரச ஊழியர்கள் மட்டுமின்றி சாதாரண பொது மக்களும் நன்மை அடைவர். இவ்வாறான செயற்பாடுகளை செய்து மக்களின் அவல நிலையை போக்குகின்ற போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் இலகுவாக வெற்றியடைந்து கொள்ள வாய்ப்பாக அமையும் என்பதை ஜனநாயக முன்னணியின் சார்பாக வலியுறுத்திக் கூறுகிறோம்.

எனவே நாட்டில் ஜனாதிபதி தேர்தலோ, நாடாளுமன்றத் தேர்தலோ நடைபெறுவதற்கு முன்பாக அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை அல்லது வாழ்க்கைச் செலவை குறைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யும் போது தேர்தல்களில் மக்கள் ஆர்வம் காட்டு நிலை உருவாகும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.– என்றார்.



# அற்புதம் நிறைந்த கதிர்காமமும் காட்டுவழி ஊடான யாத்திரையும்

**அனுபவப் பகிர்வு - நடராஜன் ஹரன்**

உலகில் கந்தக் கடவுளின் புனித பூமியாகக் கருதப்படும் கதிர்காமம் முருக வழிபாடு தோற்றம் பெற்ற காலம் முதல் இங்கு இருந்துவந்துள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. இலங்கையின் தென் பகுதியான மொனராகலை மாவட்டத்தின் தென் எல்லையில் கதிர்காம திருத்தலம் அமைந்துள்ளது.

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தை முன்னிட்டு கதிர்காமத்துக்கான 'காட்டுப் பாதை' கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'காட்டுப்பாதை' திறப்பு நிகழ்வில், கிழக்குமாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அம்பாறை மாவட்ட அரச அதிபர், மேலதிக அரச அதிபர், லாகுகலை பிரதேச செயலாளர், மொனராகலை மாவட்ட அரச அதிபர், ஆலய வண்ணக்கர் உள்ளிட்ட யாத்திரிகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

காலை 5.30 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடத்தி ஆசியுரை வழங்கியதை தொடர்ந்து காலை 7 மணியளவில் காட்டுப் பாதையை கிழக்கு மாகாண ஆளுநர் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்ததையடுத்து, முதல் நாளான அன்றே வரலாறு காணாத அளவுக்கு 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் யாத்திரையை ஆரம்பித்தனர்.



கதிர்காமத்துக்கான பாத யாத்திரையை வடக்கே யாழ்ப்பாணம், செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து வேல்சாமி தலைமையில் பாத யாத்திரை அடியார்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆரம்பித்து உகந்தையைச் சென்றடைந்த நிலையில், அங்கிருந்து கதிர்காமத்துக்கான 56 மைல் தூரம் கொண்ட காட்டுப் பாதை வழியே பயணத்தை ஆரம்பித்தனர்.

இந்தகாட்டுப்பாதைஉகந்தையிலிருந்து 5 மைல் தூரத்தில் வாகூரவட்டை, பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு, 12 மைல் தூரத்தில் நாவலடி, பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை, 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு, 8 மைல் தூரத்தில் கட்டகாமம், அடுத்த 8 மைல் தூரத்தில் கதிர்காமம் வரையிலான 56 மைல்களை சுமார் 6 நாள்கள் பாத யாத்திரையை மேற்கொண்டு கதிர்காம கொடியேற்ற தினத்தன்று பக்தர்கள் சென்றடைவர்.

இவ்வருடம் காட்டுப் பாதையூடாக சுமார் 45 ஆயிரம் பக்தர்கள் பாத யாத்திரையை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் முதல் நாளான அன்றே சுமார் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாத யாத்தி

தொடர்ச்சி▼

# அற்புதம் நிறைந்த கதிர்காமமும் காட்டுவழி ஊடான யாத்திரையும்

தொடர்ச்சி▲

ரீகர்கள் பயணித்துள்ளனர்.

அத்துடன் கதிர்காம பாத யாத்திரை அகத்திய முனிவர் தொடக்கி அருணகிரி நாதர், யோகர் சுவாமி, சித்தானைக் குட்டி வரையிலான எண்ணிறைந்த சித்தர் பெருமக்கள் நடை பவனி சென்ற பாதையாகவும் இந்த காட்டுப்பாதை காணப்படுவதாக 'ஷேத்திராடனம்' எனும் நூலில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முருகனை குறுஞ்சிக்கடவுள் என்றும் கூறுவர். முருகனின் உறைவிடங்கள் யாவும் இயற்கை எழில் கொஞ்சும் காடு, மலை, சோலை, நீரோடைகள், நதிகள், கங்கைகள், கடல்கள் போன்றவற்றின் நடுவினிலேயே அமைந்திருப்பது கணகொள்ளாக் காட்சி.




சகல இனம்களையும் கவர்ந்திழுக்கும் இயற்கை எழிலும் ரம்மியமும் நிறைந்த இடங்களாக இருப்பதால் முருகனுக்கு பக்தர்கள் கூட்டம் என்றுமே குறைவின்றி இருக்கும். முருகப் பெருமான்அம்மைஅப்பனோடு எழுந்தருளி அருள் பாலிக்கும் அற்புதமான தெய்வம் உலக மக்களை ஒருங்கே ஈர்க்கும் சக்தி முருகக் கடவுளுக்கு மட்டுமே உண்டு இதனால் தான் இன நல்லுறவு, சமத்துவமும் மிக்க அற்புத கடவுள் என்றும் அழைக்கப்படுகின்றார்.

கதிர்காமத்தில்முருகன்அருள் பாலிக்கின்றார் என்று மிக இலகுவாக எளிதாக சொல்லி விடக் கூடிய விடயமல்ல. பல அற்புத சக்திகள் சூட்சுமங்கள் ஒருங்கே அமையப்பெற்ற புனித தலம் இதுவாகும். இத் தலமானது எப்போது தோற்றம் பெற்றது என்று சரியாக அறுதியிட்டு கூறமுடியாதுள்ள போதிலும் கதிர்காமப்பதி இராமாயண காலததுக்கும் முற்பட்டதும், அகத்திய மாமுனியின் காலத்துக்கு அப்பாற்பட்டது எனவும் கூறப்படுகின்றது.

இதில் இராஜவலியவில் இருந்து இலங்கைக்கு விஜயன் வந்தபோது அவனைக் கொல்ல குவேனி சூழ்ச்சி செய்ததாகவும் அந்த சூழ்ச்சி கதிர்காம கந்தன் அருளினால் விஜயன் காப்பாற்றப்பட்டான் எனவும் கூறுகின்றது . இலங்கையின் பண்டைய நூல்களானஇராஜாவலிய மகாவம்சம், கந்த உபாந்த போன்றவற்றில் கதிர்காமம் பற்றிய குறிப்புகள் உள்ளன.

### கதிர்காமத்துக்கு பாதாயாத்திரை

இந்தநவீனகாலத்தில்எத்தனை வாகன வசதிகள் ஏற்பட்டு விட்ட போதும் பல மாதங்களை இதற்கென ஒதுக்கி பாத யாத்திரை செய்து வழிபாடு ஆற்றும் பண்பு இன்றும் பேணப்பட்டு வருகின்றமை முருக பக்திக்கு பெரும் சான்றாகும்.

கதிர்காம உற்சவத்தை ஒட்டியதாக யால காட்டினூடாக சராசரி 50 ஆயிரம் முதல் 90 ஆயிரம் அடியார்கள்வரை பக்தி பூர்வமாக கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை செல்கின்றனர்.

இவற்றில் 80 வீதமான பக்தர்கள் உகந்தைமலை ஸ்ரீமுருகன் ஆலயத்தில்இருந்துதான் காட்டினூடாக பாதயாத்திரை மேற்கொள்வது வழமையாகி விட்டது.

நாட்டின் நாலா புறத்திலிருந்தும் மத்திய மலை நாட்டிலிருந்தும் பக்தர்கள் பாதயாத்திரையில் ஈடுபடுவார்கள். இதன்போது அமைப்புக்கள், குழுக்கள் ரீதியாகவும், ஜோடியாகவும் தனியாகவும் இந்தப் பாதயாத்திரையை மேற்கொள்கின்றனர்.

எனினும் இதில் யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் 54 நாள்களைக் கொண்ட வேல் சாமி தலைதாங்கும் குழுவினரே இலங்கையின் நீண்ட கதிர்காம பாதயாத்திரையாக இன்றும் கருதப்படுகின்றது.

இதற்கு சான்றாக இவர்கள் வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய 03 மாகாணங்களையும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி , முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்றவற்றிலும் பார்க்க, அம்பாறை, மொனராகலை ஆகிய மாவட்டங்களே யாத்திரையின் வன வழி பாதையாக அமைந்திருக்கின்றது.

### காட்டுப்பாதையின் அற்புதம்

கதிர்காம வனவழிப்பாதை யாத்திரையானது கொடிய மிருகங்களின் இருப்பிடமான கானகங்களுக்கு இடையறுத்துச் செல்லும் இந்தப் பாத யாத்திரையில் செல்லும் பாதை

தொடர்ச்சி▼

# அற்புதம் நிறைந்த கதிர்காமமும் காட்டுவழி ஊடான யாத்திரையும்

தொடர்ச்சி▲

யெங்கும் கல்லும் முள்ளும் மணலும் புல்லும் நீரும் வனப்பும் வெயிலும் வதைக்க கந்தப் பெருமான் எங்கள் சொந்தப் பெருமான் என்று கூறிக் கொண்டு அரோகரா கோஷம் எழுப்பி தாம் கொண்டு வந்த இசைக் கருவிகளுடன் கந்தன் பாமாலை பாடியவாறு செல்வர்.

உகந்தை யால சரணாலயம் ஊடான பாதயாத்திரை கூமுனை என்ற இடத்திலிருந்தே ஆரம்பமாகின்றது.

இலங்கையில் எல்லாள மன்னனின் ஆட்சி வியாபித்திருந்த கால கட்டத்தில் எல்லாள மன்னனை வெற்றி கொள்வதற்காக மாகம இராட்சியத்தில் இருந்து விஜயன் படை கொண்டு முதலில் கதிர்காம முருகபதிக்கு வந்து முருகனை வணங்கிய பின்பே போர் தொடுத்து வெற்றிவாகை சூடினான். இந்த வெற்றிக்குத் தனக்கு பேரருள் புரிந்த கந்தனுக்கு பெரும் ஆலயம் ஒன்றை அமைத்ததுடன் பெரு வெற்றி விழாவாக கொண்டாடியுள்ளான்.

இதனாலேயே கதிர்காம திருவிழா வரும் போது முருகன் யானை மீது அமர்ந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுப்பதுடன் சுவாமிக்கு முன் யானைகள் அணிவகுத்து செல்வதும் சுவாமிக்கு பின்னால் குறுநில மன்னன் பிரதானிகளுடன் அணிவகுத்து வருவதும் இன்றும் வழமையாக தொடர்ந்துள்ளது. இது தற்காலத்தில் பெரஹேர என்று அழைக்கப்படுவதுடன் இதன் போது பல மரபு ரீதியான கலை கலாசார நாட்டிய நடன இசை நிகழ்வுகள் அணிவகுத்து செல்வதும் காணக் கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த சிங்கை சேகராச சேகரன் (கி.பி. 1394 -1414) தக்ஷண கைலாய மான்மியத்தை கருப்பொருளாகக் கொண்டு தமிழில் தகஷிண கைலாய புராணத்தை எழுதியுள்ளான் இதுவே கதிர்காமம் பற்றிய கூறும் பழமை வாய்ந்த ஆவணமாகும். முருகப் பெருமான் கதிர்காமத்தில் பாசறை அமைத்து தங்கி சூரனை வதம் செய்ததாகவும் கதிரமலையில் விஷ்வகர்மாவை கொண்டு ஆலயம் அமைத்து அதில் தான் தங்கி இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இராமாயணத்தில், சீதையை இராவணன் கடத்தி இலங்கையில் சிறை வைத்த போது தூதுவனாக வந்த அனுமான் கதிர்காமத்துக்குச் சென்று வணங்கி அருள் பெற்ற பின்பே சீதையைக் காணச் சென்றான் என்ற கூற்றானது, கதிர்காமம் இராமாயண காலத்துக்கு முற்பட்டது என்று தெளிவாக காணக்கிடைகின்றது. தற்போது நாம் காணும் கதிர்காம முருகன் ஆலயம் கி.மு. 16 ஆம் நூற்றாண்டில் முதலாம் இராஜசிங்க மன்னன் காலத்தில் மன்னனின் ஆசியுடன் மூன்றாம் கல்யாண கிரி சுவாமியால் புனரமைக்கப்பட்டதாகும்.

கதிர்காமத்தில் குடி கொண்டுள்ள முருகப் பெருமானின் அருட் கொடைகளை பெற்றுக் கொள்ளும் முகமாக வட இந்தியாவிலிருந்து வந்த தசநாமி பரம்பரையினர் தெய்வானை அம்மன் ஆலயத்தில் தங்கி கோவில் மடாதிபதியாக மாற்றம் பெற்றனர். இவர்கள் தெய்வானை அம்மன் ஆலயத்தைப் பராமரித்து வந்தவர்களாவர். கதிர்காம முருகன் ஆலயம், வள்ளி அம்மன் ஆலயம், பத்தினி அம்மன் ஆலயம் என்பன கப்புறாளையரால் பூசைகள் மேற்கொள்ளப்படுவதுடன் வேடுவர்களின் வழித்தோன்றல்களுக்கு பூரண அதிகாரம் அந்தஸ்தும் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

ஆதிமூல கருவறைக்குள் பக்தர்கள் செல்ல முடியாது. இது திரையால் மூடி மறைக்கப்பட்டுள்ளது. இது பரம இரகசியமான புனிதத்துவம் மிக்க இடமாகும். காற்றும் வெளிச்சமும் உட்புகுமாறு துவாரமோ, சாளரமோ இங்கு இல்லை. பிரதான கருவறைக்கும் மத்திய அறைக்கும் இடையே சிறு கதவுண்டு. கப்புறாளையர்கள் மட்டும் பக்தி சிரத்தையுடன் செல்வார்கள். பக்தர்கள் காணிக்கைகளை செலுத்துவதற்கு மத்திய அறை வரைக்குமே அனுமதிக்கப்படுவர்.



மந்திர சக்தி இயந்திரத்தை கொண்ட வெண் பட்டு துணியால் மூடிய பேழையை யானை சுமந்து ஊர்வலம் வரும். இதன் போது விவரிக்க முடியாத சூட்சும சக்தி எங்கும் பரவி பக்தர்களுக்கு அருள் கிட்டும். இதன் போது சில பக்தர்கள் மெய்மறந்து பாடி ஆடி பரவசக் கண்ணிர் மல்கக் காவடி எடுத்து, கற்பூரச் சட்டி ஏந்தி, அங்கப்பிரதட்ஷணம் செய்து தமது நேர்த்திக் கடன்களை நிவர்த்திப்பர்.

## ஆலய கொடியேற்றம்

கதிர்காமத்தைத் தமிழில், கதிர் - ஒளி காமம் - அன்பு நிறைந்த இடம், என்பதுடன் கதிரு எனும் சிங்களச் சொல்லின் மருவு என்று விளக்கி கூறுகின்றனர். இருப்பினும் சிங்களத்தில் கதரகம என்று அழைக்கின்ற வழமையும் உள்ளது. இந்தத் தலத்துக்கு இவ்வாறான சிறப்புப் பெயர் வந்தமைக்கான காரணம் ஒரு புதிராகவே உள்ளது.

கதிர்காம உற்சவத்தை ஒட்டியதாக யால காட்டினூடாக சராசரி 50 ஆயிரம் முதல் 90 ஆயிரம் அடியார்கள் வரை பக்தி பூர்வமாக கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை செல்கின்றனர்.

ஆலய திருக் கொடியேற்றல் நிகழ்வு காலை கதிர்காமத்தின் பால்குடி பாவா பள்ளிவாசலில் பச்சை நிறத்திலான கொடியை

தொடர்ச்சி▼

# அற்புதம் நிறைந்த கதிர்காமமும் காட்டுவழி ஊடான யாத்திரையும்

**தொடர்ச்சி▲**

வைத்து இஸ்லாமிய மதப் பெரியார்கள் பிரார்த்தனையுல் ஈடுபட்டு, பின்னர் அதற்கு சந்தனம்பூசி ஆகமமுறைப்படி பாரம்பரிய இசையுடன் பள்ளிவாசலை வலம் வந்து உள்ளே பிரார்த்தனைஇடம்பெற்றுத்தொடர்ந்து அனைத்து மத பெரியார்களுடன் கதிர்காம ஆலய கப்புறாளையருடன் கொடியேற்றப்படுவது வழமை.

அரோகராசத்தம்விண்ணைப் பிளக்க மத மொழிகளைக் கடந்து அனைவரும் ஒன்றிணைந்து வழிபடும் பண்பு மெய்சிலிர்க்கும் உள்ளுணர்வு இவ் ஆலயத்தின் தனிச் சிறப்பம்சமாகும்.

இன்று கதிர்காமம் புனித மண்ணில் பல ஆலயங்கள் அமையப் பெற்றுள்ள போதிலும் நாம் மனமுருகி வழிபடுகின்ற முருகன் ஆலய பூசைகள் மற்றும் அதனுடன் கூடிய சமய அனுஷ்டானங்கள் யாவும் கப்புறாளையினரால் இடம் பெறுகின்றன. கப்புறாளையர்கள் வாயினை துணியால் கட்டி மௌன பூசை நடத்துவர். இதுவே கதிர்காம மரபாகவும் இருந்து வருகின்றது.

அருணகிரினாதரின் கதிர்காம திருப்புகழில், “வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ் கதிர்காமம் உறைவோனே” என்று பாடுகின்றார்.

இன்றைக்கும் கதிர்காமத்தில் பூசை செய்யும் பூசகர்களான சிங்கள பொழி பேசும் கப்புறாளையர் என்போர் தாங்கள் வள்ளி நாயகியின் வழிவந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதமடைவதைக் காணலாம்.

இந்தக் கப்புறாளையரின் கட்டுப்பாட்டில் பிரதான முருகன் ஆலயம், வள்ளி அம்மன் ஆலயம், பத்தினி அம்மன் ஆலயம் ஆகிய மூன்றும் உள்ளன. இந்த கப்புறாளை எனப்படுபவர் வேடுவர் பரம்பரையில் வந்தவர்களாவர்.

பிரதான முருகன் ஆலயத்தை ஒட்டியதாக அமைந்திருக்கும் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம், தெய்வானை அம்மன் ஆலயம், பழனி ஆண்டவர் ஆலயம், வைரவர் வீரபாகு தேவர் ஆலயம், காளி அம்மன் ஆலயம், முத்துலிங்க சிவன் ஆலயம், செல்லக் கதிர்காமம் பிள்ளையார் கோவில், கதிரமலை முருகன் கோயில், கதிரமலை சிவன் கோவில் ஆகிய கோவில்கள் வட இந்திய சன்னியாசி பரம்பரையினரால் இன்றும் பராமரிக்கப்படுகின்றது.

பிரதான கோயிலின் அருகில் அமைந்துள்ள பெருமாள் கோவிலும் , கிரி விகாரையும், பௌத்த பிக்குகளால் பரிபாலிக்கப்படுகின்றன. இஸ்லாமிய பெரியார் ஒருவரின் மசூதி, பள்ளிவாசல் இஸ்லாமியர்கலால் பராமரிக்கப்படுகின்றன.

இவை தவிர பிற்காலத்தில் பல ஆலயங்கள் கதிர்காம புனித பூமியில் கட்டடப்படுள்ளன.

கதிரமலைகுன்றுகள்தோறும் குடியிருக்கும் குமரக் கடவுளின் படை வீடான கதிரமலையானது இங்குள்ள ஏழுமலைகளில் உயரத்தில் அமையப் பெற்றுள்ளது. கதிரமலை என பண்டைய நாமத்துடன் அழைக்கப்பட்ட போதும் இன்று ஏழு மலை எனும் நாமத்துடன் திகழ்கின்றது.

இதன் உயரம் 423 மீற்றராகும். இங்கு முதலில் சிவன் குடிகொண்டிருந்தார் என்றும் பின்னர் சிவபெருமான் தனது புதல்வனான முருகனுக்கு கதிரமலையைக் கொடுத்துவிட்டு

கதிரமலையான ஏழுமலையின் கிழக்கு சரிவில் இருந்து வள்ளிமலைக்கு செல்லும் பாதை ஆரம்பமாகின்றது. இவ்வள்ளியம்மன் மலைக்கு செல்லும் பாதை படிகள் அமைக்கப்பட்டு செப்பனிடப்படாத போதிலும் மிக இலகுவாக மலையின் சிகரத்தை அடைய முடியும். அங்கு அழகிய சிறிய குகையினுள் அம்மன் வீற்றிருக்கின்றாள். இதை வள்ளி அம்மன் குகை என அழைக்கின்றனர்.

### சூரன் கோட்டை (கிரிவிஹாரை)

இங்குசூரபத்மனின்கோட்டை இருந்துள்ளதாகவும் முருகப்பெருமான் கதிரமலையில் வீற்றிருந்து சூரனுடன் யுத்தம் புரிந்ததாகவும் கூறப்படுகின்றது. தற்போது சூரன் கோட்டையில் காணப்படும் நீண்ட கற்றூண்கள் அவனது கோட்டையின் எச்சங்களாக இன்றும் காண முடிகிறது. அருகில் ஓடிக் கொண்டிருக்கும் மாணிக்க கங்கையில் நீராடுதலே தனிச் சிறப்பாகும். இலங்கையின் முருகத்தலங்களுள் தலை சிறந்ததாக உள்ள கதிர்காமம் அற்புதங்களும் சக்தியும் நிறைந்த இடம் என்றால் அது மிகையாகாது.

எது எப்படி இருப்பினும் கதிர்காமத்தில் ஒரு அபரிமிதமான சக்தி பரவியிருப்பதை அங்கு செல்லும் பக்த அடியார்கள் உணர்து சொல்வதையும் அந்தச் சக்தி எல்லோரையும் இந்தக் காலங்களில் கவர்ந்திழுப்பதையும்யாராலும்மறுக்க முடியாது.





# போலி டிக்கெட்டுகளுடன் விமான நிலையத்துக்கு வந்த நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகளால் பரபரப்பு

**மதுரை, ஜூலை 12**

நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் போலி டிக்கெட்டுகளுடன் மதுரை விமான நிலையத்திற்கு வந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மதுரையிலிருந்து அயோத்திக்கு சுற்றுலா செல்வதற்காக தனியார் விமானத்தில் முன்பதிவு செய்த நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் இன்று காலையில் மதுரை விமான நிலையம் வந்தனர். பாதுகாப்பு சோதனை முடிந்து அவர்கள் விமான நிலையத்திற்குள் சென்ற நிலையில், அங்கு அவர்களது டிக்கெட்டுகளை பரிசோதித்த தனியார் விமான நிறுவன அதிகாரிகள் அவ்வாறு எதுவும் புக்கிங் செய்யப்படவில்லை என்றும் அந்த டிக்கெட்டுகள் போலியானவை என்றும் தெரிவித்தனர்.

இதையடுத்து போலி விமான டிக்கெட்டுகளுடன் வந்த நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் விமான நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து அந்தப் பயணிகள் தங்களுக்கு டிக்கெட்டுகளை முன்பதிவு செய்த முகவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் “நான் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யவில்லை, எனக்கு தெரிந்த ஒருவரிடம் சொல்லிச் செய்தேன். உடனடியாக இதுகுறித்து அவரிடம் விசாரித்து வேறு டிக்கெட் ஏற்பாடு செய்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

இதையடுத்து பயணிகள் அனைவரும் மதுரை விமான நிலையத்திற்கு வெளியே காத்திருக்கின்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் போலி டிக்கெட்டுகளுடன் மதுரை விமான நிலையத்திற்கு வந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அரவித் கெஜ்ரிவாலுக்கு ஒரு வழக்கில் பிணை இன்னொரு வழக்கால் உள்ளிருக்கும் நிலை!

**புதுடெல்லி, ஜூலை 12**

டெல்லி முதல் மந்திரி அரவிந்த் கெஜ்ரிவாலை உச்ச நீதிமன்றம் இடைக்காலப் பிணையில் விடுவிக்க அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது.

டெல்லி அரசின் மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் முதல்-மந்திரி கெஜ்ரிவால் கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்டார். அமலாக்கத்துறையின் இந்த கைது நடவடிக்கைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்திக் அவர் மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனுவை நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, திபாங்கர் தத்தா அமர்வு விசாரித்தது. இந்த வழக்கில் கெஜ்ரிவால் சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் அபிஷேக் சிங்வி, நிதி மோசடி தடுப்பு சட்டத்தின் பிரிவு 19இன் நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததன் மூலம் கெஜ்ரிவாலை கைது செய்ததில் அமலாக்கத்துறை தவறு செய்ததாக குற்றம் சாட்டினார்.



இந்த வழக்கின் விசாரணை கடந்த மே மாதம் முடிந்த நிலையில், தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில், இன்று தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால பிணை அனுமது அளித்து உத்தரவிட்டு இருக்கிறது.

ஏற்கனவே சிபிஐயும் மதுபான கொள்கை வழக்கில் கெஜ்ரிவாலை கைது செய்து இருப்பதால், அவர் சிறையில் இருந்து வெளியே வர முடியாத நிலை உள்ளது.



# நேபாளத்தில் நிலச்சரிவால் ஆற்றில் விழுந்த இரு பஸ்கள்; 63 பயணிகளின் கதி என்ன?

**காத்மாண்டு,ஜூலை12**

நேபாளத்தில் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால், கடந்த ஒரு மாத காலமாக கன மழை பெய்து வருகிறது.

கனமழை காரணமாக, திரிசூலி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதன் காரணமாக, மதன் - ஆஷ்ரித் நெடுஞ்சாலையில் நிலச்சரிவு ஏற்பட்டு, இன்று அதிகாலை 3.30 மணியளவில், சாலையில் சென்றுகொண்டிருந்த இரண்டு பஸ்கள் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டன.

சாலையில் பஸ் சென்றுகொண்டிருந்தபோது, கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டு, சாலையின் பெரும் பகுதி ஆற்றில் வெள்ளப்பெருக்குடன் அடித்துச் செல்லப்பட்டபோது, சாலையில் சென்று கொண்டிருந்த இரு பஸ்களும் ஆற்றில் விழுந்தன என்று கூறப்படுகிறது. ஆற்றில் அடித்து செல்லப்பட்ட இரண்டு பஸ்களிலும் 63 பயணிகள் பயணம் செய்தனர் என முதல் கட்டத் தகவல் வெளியாகியுள்ளது. மீட்பு பணி தற்போது முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பயணிகளின் நிலை என்ன? என்று தெரியவில்லை. தற்போதைக்கு எந்த தகவலையும் கூற முடியாது என்று மீட்பு பணியில் ஈடுபட்ட அதிகாரிகள் கூறியுள்ளனர். மேலும், கனமழையால் மீட்பு பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# உக்ரைனுக்கு ஆயுதங்களை வாரி வழங்க அமெ. உறுதி!



உக்ரைனுக்கு மேலும், ஆயுதங்களை வழங்குவோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

நேட்டோ அமைப்பின் 75 ஆவது ஆண்டு விழாவையொட்டி, அமெரிக்காவின் வொஷிங்டனில் நேட்டோ உச்சி மாநாடு நேற்று ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் நேட்டோ உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டுள்ளமையுடன், சிறப்பு அழைப்பாளராக உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கியும் பங்கேற்றிருந்தார்.

இந்த மாநாட்டின் தொடக்க விழாவில் ஜனாதிபதி ஜோ பைடன் உரையாற்றுகையில், எதிர்வரும் மாதங்களில் அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் உக்ரைனுக்கு அதிகளவான வான் பாதுகாப்பு அமைப்புகள் உட்பட ஏராளமான ஆயுதங்களை வழங்க முடிவு செய்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உக்ரேனுக்கு முக்கியமான வான் பாதுகாப்பு இடைமறிப்புகளை ஏற்றுமதி செய்யும் போது, இந்த போரில் உக்ரேன் முன்னோக்கி செல்வது உறுதி செய்யப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த போரில் ரஷ்யா தோல்வியடைந்து வருவதாகவும், 2 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் விளாடிமர் புட்டினின் இந்த விருப்ப போரில், அவரது இழப்புகள் அதிர்ச்சி அளிப்பன எனவும் அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

உக்ரேன் - ரஷ்ய போரில் மூன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட ரஷ்ய துருப்புக்கள் உயிரிழந்துள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இந்த போரில் ரஷ்யா வெற்றி பெறாது எனவும், உக்ரைனே வெற்றி பெறும் எனவும் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி, உலக பாதுகாப்பின் அரணாக நேட்டோ உள்ளதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும் எனவும் வலியுத்தியுள்ளார்.

பக்கங்கள் - 7

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 12/07/2024

## 36 வாகனங்களை வாளினால் தாக்கிச் சேதப்படுத்திய நபர்!

### ஹமில்டன் பகுதியில் கைது

கனடாவின் ஹமில்டன் பகுதியில் நபர் ஒருவர் 36 வாகனங்களை வாள் ஒன்றின் மூலம் தாக்கி சேதப் படுத்தியுள்ளார் எனக் குற்றம் C2▸



# மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதத்தை 2032 முதல் பாதுகாப்புக்கு கனடா செலவிடும்!

## நேட்டோ அழுத்தத்துக்கு ட்ரூடோ பதில்

ஒன்ராரியோ, ஜுலை 12

2032ஆம் ஆண்டிற்குள் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 2 சதவீதத்தை பாது காப்புக்காக செலவிட எதிர்பார்ப்பதாக கனடிய அரசாங்கம் தெரிவித்தது.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த அறி வித்தலை நேற்று வெளியிட்டார்.

2032ஆம் ஆண்டிற்குள் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் இரண்டு சதவீதத்தை பாதுகாப்பிற்காக செலவழிக்கும் நேட்டோவின் உறுதிமொழியை அடைய எதிர்பார்ப்பதாக கனடா கூறுகிறது.

வொஷிங்டன் நகரில் நடைபெறும் நேட்டோ உச்சி மாநாட்டின் இறுதி நாளில் பிரதமர் ட்ரூடோ இந்த அறிவித்தலை வெளியிட் டுள்ளார். C2▸




# கனடாவை மோசமாக விமர்சனம் செய்யும் அமெரிக்க சபாநாயகர்

கனடாவின் பாதுகாப்பு செலவு கள் தொடர்பில் அமெரிக்க சபா நாயகர் கடுமையான விமர் சனங்களை முன் வைத்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றின் சபாநாயகர் மைக் ஜான்சன் இந்த விமர்சனத்தை வெளியிட்டுள்ளார்.

கனடாவின் பாதுகாப்பு செலவு வெட்கப்படும் வகையில் அமைந் துள்ளதாக அவர் தெரிவித்துள் ளார்.

அமெரிக்காவின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் கனடா குளிர் காய் வதாக அவர் குற்றம் சுமத்தி யுள்ளார்.

எல்லைப் பகுதியில் அமெ ரிக்கா கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளதாக வும் இதன் காரணமாக கனடா அசமந்தப் போக்காக C2▸






# கனடா மேலதிகமாக 500 மில்லியன் டொலர் இராணுவ உதவிகளை உக்ரைனுக்கு வழங்கும்

உக்ரைனைச் சுற்றி நேட்டோ அணிவகுத்து வருவதால், கனடா கூடுதல் 500 மில்லியன் டொலர் இராணுவ உதவியை வழங்குவதாக அறிவித்தது.

நேட்டோ உச்சி மாநாட்டில், இந்த ஆண்டு உக்ரைனுக்கு கூடுதலாக 500 மில்லியன் டொலர் இராணுவ உதவியை வழங்க கனடா திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

நேட்டோ நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட உறுதிமொழிகளையும், உறுதியையும் அளித்தது. அதே சமயம், மேற்கத்திய போர் விமானங்களை ஓட்ட கற்றுக் கொள்ளும் உக்ரைன் விமானிகளுக்கு பயிற்சியை விரிவுபடுத்துவதாகவும் கனடா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, நெதர்லாந்து மற்றும் டென்மார்க் ஆகியவை நேட்டோவினால் வழங்கப்பட்ட முதல் கு-16 விமானங்கள், இந்த கோடையில் உக்ரேனிய இராணுவ விமானிகளின் கைகளில் இருக்கும் என்று புதன்கிழமையன்று அறிவித்தன.

வாஷிங்டனில் நடந்த இந்த மாநாட்டின் இடையே கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ , உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியிடம் பேசினார்.

பின்னர் நேற்று இதுகுறித்த வீடியோவை எக்ஸ் தளத்தில் பகிர்ந்து ட்ரூடோ, “நேட்டோவில் ஜெலென்ஸ்கியுடன் நான் பகிர்ந்துகொண்ட செய்தி: உக்ரைனின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தவும், ரஷ்யாவிற்கு எதிராக தங்கள் வானத்தை பாதுகாக்கவும், உக்ரேனியபோர்விமானிகளுக்குபயிற்சி அளிக்கவும், 500 மில்லியன் டொலர் இராணுவ ஆதரவுடன் வலுப்படுத்த கனடா திட்டமிட்டுள்ளது” என குறிப்பிட்டுள்ளார்.

**கனடாவை மோசமாக...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பட்டு வருகின்றது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது வெட்கப்பட வேண்டிய விடயம் என அவர் தெரிவித்துள்ளார்.

நேட்டோ அமைப்பில் அங்கம் வசிக்கும் கனடா அந்தந்த நாடுகளுக்குரிய வகிபாகத்தை நிறைவேற்ற தவறி உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு வீதம் அளவில் பாதுகாப்பு செலவிற்கு ஒதுக்க வேண்டியது அவசியமானது என நேட்டோ அறிவித்துள்ளது.

இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் கனடிய அரசாங்கம் இதுவரையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு வீதத்தை பாதுகாப்பு செலவுகளுக்கு ஒதுக்க தவறி உள்ளதாக அவர் குற்றம் சுமத்தி உள்ளார்.

தற்பொழுது கனடிய அரசாங்கம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.37 வீதம் அளவிலேயே பாதுகாப்பிற்காக செலவிடுகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

குறைந்த அளவில் பாதுகாப்பிற்கு செலவிடும் நாடுகளில் ஒன்றாக கனடா திகழ்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

நேட்டோ அமைப்பு உருவாக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவாகும் நிலையில் அமெரிக்காவில் விசேட நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

அந்த நிகழ்வில் கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவும் பங்கேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மொத்த உள்நாட்டு...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு சதவீதத்தை பாதுகாப்புக்காக செலவழிக்கும் நேட்டோவின் எதிர்பார்ப்பை எட்டாதது குறித்த கனடிய அரசாங்கம் விமர்சனங்களை எதிர் கொண்டு வருகின்றது.

ஒரு வருடத்திற்கும் மேலாக, பாதுகாப்புச் செலவினங்களை அதிகரிக்க நேட்டோ கூட்டணி உறுப்பினர்களிடமிருந்து அதிகரித்து வரும் அழுத்தங்களையும் விமர்சனங்களையும் கனடா எதிர்கொண்டுள்ளது.

**36 வாகனங்களை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமத்தப்பட்டுள்ளது.

பொலிஸார் இது தொடர்பிலான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர்.

வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் இவ்வாறு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

வாகனங்களைத் தாக்கிச் சேதப்படுத்தியமையுடன் மக்களைத் தம்முடன் சண்டைக்கு வருமாறும் இந்த நபர் அழைத்தார் எனப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

33 வயதான நபர் ஒருவர் மீது இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், தாக்குதல் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# துணைப் பிரதமரும் நிதியமைச்சருமான கிறிஸ்டியா மீது முழு நம்பிக்கை உள்ளது

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிப்பு

**ஒன்ராரியோ, ஜூலை 12**

துணைப் பிரதமரும் நிதியமைச்சருமான கிறிஸ்டியா ப்ரீலேன்ட் மீது தாம் முழு நம்பிக்கை கொண்டுள்ளார் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

ஜஸ்டின் ட்ரூடோவின் அமைச்சரவையில் கிறிஸ்டியா ப்ரீலேன்ட்டின் பங்கு குறித்த கேள்விகள் எழுந்துள்ள நிலையில் பிரதமரால் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

கிறிஸ்டியா ப்ரீலேன்ட்டின் திறமைகள் குறித்து தனக்கு முழு நம்பிக்கை உள்ளதாகப் பிரதமர் ட்ரூடோ ஊடகவியலாளர்களிடம் நேற்றுக் கூறியுள்ளார்.

கிறிஸ்டியா ப்ரீலேன்ட்டின் செயல்திறன் குறித்து பிரதமர் அலுவலகத்தின் மூத்த அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர் என ஆங்கில இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ள நிலையில் பிரதமரின் இந்த கருத்து வெளியானது.

துணைப் பிரதமருக்கும் பிரதமர் அலுவலகத்துக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் குளோப் மெயில் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் இங்கிலாந்து வங்கியின் முன்னாள் ஆளுநர் மார்க் கார்னேவை அரசியலுக்கு அழைத்து வருவது குறித்து பேசி வருகிறார் எனவும் பிரதமர் ட்ரூடோ உறுதிப்படுத்தியுள்ளார்.

நிதி அமைச்சில் கிறிஸ்டியா ப்ரீலேன்ட்டிற்குப் பதிலாக மார்க் கார்னோவை நியமிப்பது குறித்த உரையாடல்கள் நிகழ்வதாக குளோப் மெயில் செய்தி வெளியிட்டுள்ளது.

# இங்கிலாந்து வங்கி முன்னாள் ஆளுநர் மார்க் கார்னேயை அரசியலுக்கு இழுத்து வரும் முயற்சியில் பிரதமர் ட்ரூடோ




**ஒன்ராரியோ, ஜூலை 12**

இங்கிலாந்து வங்கியின் முன்னாள் ஆளுநர் மார்க் கார்னேயை அரசியலுக்கு அழைத்து வரும் முயற்சியில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஈடுபட்டுள்ளார்.

அரசியலில் ஈடுபடுவது குறித்து மாரக் கார்னேயுடன் பேசி வருகின்றமையை பிரதமர் ட்ரூடோ உறுதிப்படுத்தியுள்ளார்.

கனடிய அரசியலுக்கு மாரக் கார்னே ஒரு சிறந்த தெரிவாக இருப்பார் எனத் தான் நம்புகிறார் எனப் பிரதமர் கூறியுள்ளார்.

லிபரல் கட்சிக்குத் தலைமை தங்குவதற்கு மாரக் கார்னே ஆர்வம் கொண்டுள்ளார் என முதலில் தகவல் வெளியாகியிருந்தது.

ஆனாலும் அடுத்த தேர்தலிலும் லிபரல் கட்சி தமது தலைமையின் கீழ் போட்டியிடும் என ட்ரூடோ குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஜஸ்டின் ட்ரூடோவின் பதவிக்கு குறி வைப்பதாக வெளியாகும் செய்தியை மாரக் கார்னே மறுத்து வருகிறார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் தலைமைத்துவம் குறித்து தொடர்ந்து கேள்விகள் தொடர்ந்து வெளியாகும் நிலையில் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

# சிறுமிகள், பெண்களிடம் அத்துமீறிய இந்திய இளைஞர் கனடாவில் கைது




சிறுமிகள் மற்றும் பெண்களிடம் அத்துமீறியமைக்காக கனடாவில் 25 வயது இந்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நியூ பிரன்ஸ்விக்கின் Moncton-யில் உள்ள பொது நீர் பூங்காவில் இளைஞர் ஒருவர் சிறுமிகள், பெண்களிடம் அத்துமீறியுள்ளார்.

இந்த 25 வயது இளைஞர் தங்களைக் கட்டிப்பிடித்துத் தவறாக நடந்து கொண்டார் எனப் 12 பேர் பொலிஸிடம் புகார் அளித்தனர். அதனைத் தொடர்ந்து இந்தியரான அந்த இளைஞரை பொலிஸார் அங்கேயே வைத்துக் கைது செய்தனர்.

அந்நபரிடம் விசாரணை நடைபெற்று வருவதாகவும், அவர் காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில், அக்டோபர் 24ஆம் திகதி ஆழஉெவழெ மாகாண நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றுள்ளது.

எனினும் குற்றம்சாட்டப்பட்டவரின் விவரம் வெளிவராத நிலையில், அவர் பூங்காவில் இருக்கும் படங்கள் மற்றும் அவரைப் பொலிஸார் கைது செய்தமை தொடர்பான படங்கள் இணையத்தில் வெளியாகியுள்ளன.

கனேடிய சட்டத்தின்படி அத்துமீறல், இளம்வயது பெண் அல்லது குழந்தையை தவறாக தொடுவது மற்றும் சுரண்டல் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் முதல் அதிகபட்சம் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்.



# ஒன்ராரியோவில் 25 லட்சம் பேருக்கு குடும்ப மருத்துவர்கள் இல்லாத நிலை

**ஒன்ராரியோ, ஜூலை 12**

ஒன்ராரியோவில் குடும்ப மருத்துவர் இல்லாதவர்களின் எண்ணிக்கை 2.5 மில்லியனை எட்டுவதாக தெரிவிக்கப் படுகின்றது.

இந்தத் தகவலை ஒன்ராரியோ மாகாண குடும்ப மருத்துவர்கள் கல்லூரி வெளியிட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட தரவுகளுடன் ஒப்பிடும் போது 160,000 பேரால் இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஒன்ராரியோவில் குடும்ப மருத்துவர்கள் இல்லாதவர்களின் சமீபத்திய எண்ணிக்கை 2023ஆம் ஆண்டு செப்ரம்பரில் பெறப்பட்டதாகும்.

மேலும் குடும்ப மருத்துவர்களை கொண்ட 670,000 பேர் அவர்களை சந்திக்க 50 கிலோமீற்றர்கள் வரை பயணிக்க வேண்டிய நிலை உள்ளனர் எனவும் ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில் கனடாவில் உள்ள மருத்துவர்களின் எண்ணிக்கையை கண்டறியும் மற்றொரு திட்டமொன்றையும் மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

2019இல் வெளியான இறுதியான மக்கள் தொகை கருத்து கணிப்பின் பிரகாரம் ஒன்ராரியோ மக்கள் தொகை 14.57 மில்லியன் என்பது குறிப்பிடத் தக்கது.



# கனடா மொன்றியால் பகுதியில் பேய் மழையால் பெருவெள்ளம்!

## போக்குவரத்துகள் பாதிப்பு

கனடாவின் மொன்றியாலில் நேற்று முன்தினம் புதன் கிழமை வரலாறு காணாத கடுமையான மழை பெய்து போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளம் காரணமாக வீதியில் பயணம் செய்த சில சாரதிகள் தங்களது வாகனங்களை கைவிட்டுச் செல்ல நேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடும் மழை வீழ்ச்சி காரணமாக சில பகுதிகளின் வீதிகள் மூடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மொன்றியால் பெரும்பாகப் பகுதியில் மழை பெய்யும் எனவும் சுமார் 70 மில்லி மீட்டர் வரையில் மழை பெய்யக் கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டிருந்தது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

மழை காரணமாக வீதியில் போக்குவரத்து செய்வதில் சிரமங்கள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிலஇடங்களில்வெள்ளம்ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பாக அதிவேக நெடுஞ் சாலைகளில் இவ்வாறு வெள்ளம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீதிகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடிய காரணத்தினால் சிலர் வாகனங்களின் கூரைகள் மேல் ஏறி உதவி கோரினர் எனவும் அவ்வாறு உதவி கோரியோர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ள நீர் அதிகரிக்கும் வேளையில் வாகனத்தில் இருக்காது அதனை விட்டு வெளியேறி செல்லுமாறு போக்குவரத்து அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக மொன்றியல் விமான நிலையத்தின் விமான பயணங்கள் பல ரத்து செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக சுமார் 12,000 த்திற்கும் மேற்பட்டவர்கள் மின்சார வசதியை இழக்க நேரிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# ஒன்ராரியோவில் காணாமல் போன பெண் 5 நாள்களின் பின் பாதுகாப்பாக மீண்டார்

**ஒன்ராரியோ, ஜூலை 12**

ஒன்ராரியோவில் காணாமல் போன பெண் ஒருவர் ஐந்து நாள்களின் பின் பாதுகாப்பாக வீடு திரும்பியுள்ளார்.

வுட்ஸ்டொக் பகுதியைச் சேர்ந்த ஜெனிதா டா சில்வா என்ற பெண்ணே இவ்வாறு காணாமல் போயிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது

இந்தப் பெண் ஐந்து நாள்களுக்கு முன்னதாக பணி முடிந்து வீடு திரும்ப வில்லை என அவரது குடும்பத்தினரும் நண்பர்களும் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.



சில்வா கடந்த வெள்ளிக்கிழமை ஐந்து மணிக்கு, குட் ஸ்ட்ரோக் பகுதியில் அமைந்துள்ள தனது பணியிடத்திலிருந்து வீட்டுக்குப் புறப்பட்டுள்ளார்.

எனினும் அவர் வீட்டுக்கு வரவில்லை எனவும் அவரை எங்கு தேடியும் காணக் கிடைக்கவில்லை எனவும் குடும்பத்தினர் தெரிவித்திருந்தனர்.

எனினும் இந்த பெண் எங்கு காணாமல் போயிருந்தார் என்பது பற்றிய விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

தனது சகோதரியை கண்டுபிடிப்பதற்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி பாராட்டுவதாக அவரது சகோதரி முகநூலில் பதிவிட்டுள்ளார்.




# போதுமான வாக்குறுதிகளை வழங்கும்படியே பழங்குடித் தலைவர்கள் எதிர்பார்க்கின்றனர்

## கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பியர் பொய்லியேவ் தெரிவிப்பு

**கியூபெக், ஜூலை 12**

பழங்குடியினரின் தலைவர்கள் போதுமான வாக்குறுதிகள் மற்றும் 'செயல்திறன் நல்லிணக்கத்தை' கேட்டுள்ளனர் என கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பியர் பொய்லியேவ் தெரிவித்துள்ளார்.

அவர்கள் நேர்மையான உரையாடல்களின் அடிப்படையில் ஒரு பங்காளித்துவத்திற்கு தகுதியானவர்கள் என்று பொய்லியேவ் குறிப்பிட்டுள்ளார்.

கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதம மந்திரி ஸ்டீபன் ஹார்பர் ஆட்சியில் இருந்தபோது கன்சர்வேடிவ்களுடன் பதற்றமான உறவைக் கொண்டிருந்த 600 க்கும் மேற்பட்ட பழங்குடியின குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அமைப்பான பழங்குடியினப் பேரவையின் வருடாந்த பொது அமர்வில் பொய்லியேவ் உரையாற்றுவது இதுவே முதல் முறையாகும்.

2018ஆம் ஆண்டில், முன்னாள் கன்சர்வேடிவ் தலைவர் ஆண்ட்ரூ ஸ்கீர் இந்த பொது அமர்வில் அவரது கொள்கைகள் ஹார்ப்பரின் கொள்கைகளிலிருந்து எவ்வாறு வேறுபடும் என்பதை விளக்க முடியாமல் போனது.

பழங்குடியின குழுக்களின் பொதுச் சபையின் தேசியத் தலைவர் சிண்டி உட்ஹவுஸ் நேபினாக் அந்த மரபிலிருந்து ஒரு பக்கத்தைத் திருப்ப விரும்புகிறார் எனக் கூறினார்.

வருடாந்த பொதுச் சபையில் உரையாற்ற அழைத்ததற்காக பொய்லியேவ் நேபினாக்கிற்கு நன்றி தெரிவித்தார்.

பழங்குடியினருடன் பொருளாதார நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும், குறிப்பாக வள மேம்பாடு மூலம் வேலைகளை உருவாக்குவதற்கும் அவர் ஆற்றிய கடமைகளை கோடிட்டுக் காட்டிய உரையின் போது சபையில் அமர்ந்திருந்தவர்கள் பெரும் கரகோஷத்துடன் அதனை வரவேற்றனர்.

ஆலோசனை உரிமை உட்பட பழங்குடியினரின் உரிமைகளை அங்கீகரிக்கும் அரசமைப்பின் பிரிவு 35க்கு ஆதரவாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நிறுவனங்கள் தற்காலிக வெளிநாட்டு ஊழியர்களை நம்பி வேலைகளை நிரப்புவதற்குப் பதிலாக, அந்த வேலை பழங்குடி இளைஞர்களுக்குச் செல்ல வேண்டும் என்ற கருத்தும், சபையில் இருந்தவர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றது.



# குற்றவாளிகளுடன் சிறையில் புலம்பெயர்ந்தோரை அடைப்பதற்கு எதிராக வழக்குத் தொடர அனுமதி!

**ஒன்ராரியோ, ஜூலை 12**

புலம்பெயர்ந்தோரை, குற்றவாளிகளுடன் சிறையில் அடைக்கும் விவகாரம் தொடர்பில், கனடிய நீதிமன்றம் ஒன்று முக்கிய முடிவொன்றை எடுத்துள்ளது.

கனடாவில், 2016ஆம் ஆண்டுக்கும் 2023ஆம் ஆண்டுக்கும் இடையில் மட்டும், 8,360 புலம்பெயர்ந்தோர் கனடாவின் எல்லைப் பாதுகாப்பு நிறுவனத்தால் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் குற்றவாளிகளுடன் சிறையில் அடைக்கப்படுவதை எதிர்த்து, மத்திய அரசுக்கு எதிராக வழக்குத் தொடர ஒன்ராறியோ நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

புலம்பெயர்ந்தோர், குற்றவாளிகளைப் போல குற்றவாளிகளுடன், கைவிலங்கிடப்பட்டு, ஆடைகளைக் களைந்து சோதனையிடப்பட்டு, எங்கும் செல்லவோ, யாரையும் சந்திக்கவோ கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு கொடூரமான குற்றம் செய்தவர்களுடன் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள் என்று நீதிபதி பெஞ்சமின் கிளஸ்டின் தெரிவித்துள்ளார்.

அப்படி இந்த புலம்பெயர்ந்தோர் வழக்குத் தொடர்வதைத் தடுப்பதற்காக, பெடரல் அரசு சார்பில் சட்டத்தரணிகள் 15 எதிர்ப்புகள் அல்லது மறுப்புகள் தெரிவித்த நிலையில், அவற்றை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

நீதிமன்றத்தின் இந்த முடிவை, பாதிக்கப்பட்டவர்களும், புலம்பெயர்தல் ஆதரவு அமைப்பினரும் வரவேற்றுள்ளார்கள்.



# கொலம்பியா நதி ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்கு கனடிய - அமெரிக்க அரசாங்கங்கள் உடன்பாடு

**ஒன்ராரியோ, ஜூலை 12**

கனடிய மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் கொலம்பியா நதி ஒப்பந்தத்தை எவ்வாறு நவீனமயமாக்குவது என்பது குறித்த இணக்கத்தை எட்டியுள்ளன.

இது தென்கிழக்கு பிரிட்டிஷ் கொலம்பியாவிலிருந்து வொஷிங்டன் மாநிலத்திற்கு பாயும் நீர்வழியை ஒழுங்குபடுத்தும் பல தசாப்த கால ஒப்பந்தமாகும்.

வொஷிங்டனில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இந்த கொள்கை ரீதியிலான இணக்கம், வெள்ள அபாய முகாமைத்துவம் மற்றும் ஆற்றில் நீர் மின்சாரத்தில் ஒத்துழைப்பைத் தொடர்வதற்கு வசதியாக ஒப்பந்தத்தை புதுப்பிக்க அதிகாரிகளுக்கு உதவும் எனத் தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தம், சுற்றுச்சூழல் ஆரோக்கியம் மற்றும் பழங்குடி கலாசார விழுமியங்கள் உட்பட மூல ஒப்பந்தத்தில் கருதப்படாத விதிகளையும் உள்ளடக்கியுள்ளதா. அமையும் என்று அவர் கூறியுள்ளார்.

1961 இல் கையெழுத்திடப்பட்ட மூல ஒப்பந்தத்தின் ஒரு முக்கிய அங்கம் செப்டம்பரில் காலாவதியாகின்றமை குறிப்பிடத்தக்கது.